**கவனிக்க.**- 2026.09.11 ஆந் திகதிய 2506 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2507 - 2026 සැප්තැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2026.09.18
2507 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 3252 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சை களுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/ கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## இலங்கை விவசாய சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2024 (2026)

இலங்கை விவசாய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் இலங்கை விவசாயச் சேவையின் III ஆம் தரத்தில் இங்கு கீழே I ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள 2024.06.30 ஆம் திகதியன்று வெற்றிடம் நிலவும் 125 பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்தகைமைகள் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் தினத்தன்று பூர்த்தி செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

இந்த அறிவித்தலில் “இலங்கை விவசாய சேவைப் பிரமாணக் குறிப்பு” என்பது 1880/26 ஆம் இலக்க மற்றும் 2014.09.19 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை விவசாய சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான அனைத்துத் திருத்தங்களும் எனப் பொருள்படும். “நியமன அதிகாரி” என்பது அரசாங்க சேவை ஆணைக்குழு எனவும். “செயலாளர்” என்னும் பதம் “விவசாய விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர்” எனவும். “சேவை” என்பது, இலங்கை விவசாய சேவை” எனவும் “நியமனம்” என்பது இலங்கை விவசாய சேவையின் III ஆம் தரத்திற்கு உரிய நியமனம் எனவும், “எழுத்து மூலப் பரீட்சை” என்பது இலங்கை விவசாய சேவையின் III ஆம் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2024 (2026) எனவும், வேறு விதத்தில் விபரிக்கப்படாது இருக்குமிடத்து “உத்தியோகத்தர்” என்பது இலங்கை விவசாய சேவை உத்தியோகத்தர் எனவும் பொருள்படும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.10.16 ஆந் திகதி ஆகும். இந்தப் பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2027 சனவரி மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

1. **பதவிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை :**

| *விடயப் பரப்பு* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *பதவிக் குறியீடு* |
|---|---|---|---|
| விவசாய அபிவிருத்தி | உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய அபிவிருத்தி) | 75 | 1 |
| விவசாய ஆராய்ச்சி | உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி) | 44 | 2 |
| விவசாயப் பொருளியல் | உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாயப் பொருளியல்) | 06 | 3 |

- விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk வலைத் தளத்தில் “Our Services” இன் கீழ் உள்ள “Online Applications - Recruitment Exams / E.B Exams” ஊடாக பிரசுரிக்கப்பட்டு உள்ளதுடன் நிகழ்நிலை (Online) முறையில் மாத்திரமே விண்ணப்பப்படிவங்களை முன்வைக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்றல் 2026.09.21 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறந்து வைக்கப்படுவதுடன் 2026.10.16 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு நிறைவடையும்.

- விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை தமது பிரத்தியேக கோப்பில் உள்ளடக்குவதற்காக தாபனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் தாபனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினையும் மற்றும் சேவையினை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றினையும் முன்வைத்தல் வேண்டும்.

- விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும் இறுதித் திகதி வரை தாமதிப்பதன் மூலம் ஏற்படும் எந்தவொரு பாதிப்பான நிலைமை தொடர்பிலும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

குறிப்பு :

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் போது விண்ணப்பதாரருக்கு ஒரு விடயப்பரப்புக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

2. **ஆட்சேர்ப்பு முறை:**

2.1 **எழுத்துமூலப் பரீட்சை :**

எழுத்துமூலப் பரீட்சை கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வினாத்தாள்களை உள்ளடக்கி இருக்கும் என்பதுடன் பாடப்பரப்பு இந்த அறிவித்தலின் முதலாவது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

| *வினாத்தாள்* | *காலம் (மணி)* | *ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை* | *ஆகக்குறைந்த சித்தியடையும் புள்ளிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 1 ¼ | 100 | 40 |
| விடயக் கற்கை (உரிய பதவிக்கு அமைய) | 2 | 100 | 40 |

2.2 எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% வீதத்துக்கு அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

2.3 **கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை :**

எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சித்தல் மற்றும் சேவை மூப்பிற்கு புள்ளிகள் வழங்குதல் என்பன மேற்கொள்ளப்படும். நடாத்தப்படும் பரீட்சையில் ஒவ்வொரு பாடங்களிலும் 40% புள்ளிகள் அல்லது அதிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

2.3.1 **நேர்முகப் பரீட்சையின் போது சேவை மூப்புக்கு புள்ளிகள் வழங்கப்படும் முறை** :

ஒரு விண்ணப்பதாரி உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த திகதி முதல் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதி வரை பூர்த்தி செய்துள்ள செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் மாத்திரமே சேவை மூப்பின் கீழ் புள்ளி வழங்கும் பொருட்டு கணக்கெடுக்கப்படும். ஆகக்கூடியது 30 புள்ளிகள் என்ற வரையறைக்கு உட்பட்டு அத்தகைய செயலூக்கமுள்ள திருப்திகரமான சேவைக் காலத்திற்கு ஒவ்வொரு வருடத்துக்கும் 02 புள்ளிகள் என்ற ரீதியிலும் 180 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலம் ஒன்றிற்கு 01 புள்ளி என்ற ரீதியிலும் புள்ளிகள் வழங்கப்படும்.

2.4 நேர்முகப் பரீட்சையின் போது சேவை மூப்பிற்காக விண்ணப்பதாரர்கள் பெற்ற புள்ளிகளை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு வழங்கியதன் பின்னர் குறித்த புள்ளிகளையும் பரீட்சையின் போது பெற்ற புள்ளிகளையும் சேர்த்து ஒவ்வொரு பதவிக்கும் உரிய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் இறுதியான திறமைப் பட்டியலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்படும். குறித்த முன்னுரிமைப் பட்டியலின் திறமை ஒழுங்குமுறையின் கீழ் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் உரிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

2.5 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரின் இணக்கப்பாடு கிடைக்கப்பெற்றதன் பின்னர் இந்தப் பரீட்சைக்காகத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகளை தனிப்பட்ட ரீதியில் அறிவித்து அனுப்புதல் அல்லது பரீட்சைகள் திணைக்களத்தின் www.results.exams.gove.lk வலைத்தளத்தில் வெளியிடுதல் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களினால் மேற்கொள்ளப்படும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நியதிகளும், நிபந்தனைகளும் :**

3.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். மேலும், நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது குறித்துரைக்கப்படும் வகையில் நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

3.2 நியமனதாரர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.

3.3 இலங்கை விவசாய சேவை உத்தியோகத்தர்களின் சேவைத் தேவைப்பாடுகளுக்கு அமைவாக மாகாண அரசாங்க சேவைகளிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டு உள்ளனர். அதற்காக உத்தியோகத்தர் ஒருவர் மாகாண அரசாங்க சேவையின் பதவியில் சேவையாற்றுவதற்கு தற்காலிகமாக விடுவிக்கப்படலாம். அவ்வாறு சேவையாற்ற வேண்டிய காலப் பகுதியைத் தீர்மானிப்பது சேவைத் தேவைப்பாட்டுக்கு அமைவாக நியமன அதிகாரி மற்றும் உரிய மாகாணஅதிகாரி ஆகியோருக்கு இடையே ஏற்படுத்திக் கொள்ளப்படும் இணக்கப்பாட்டுக்கு அமைவாகவே ஆகும்.

(அ) சேவையிலிருந்து விடுவிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நியமனக் கடிதமொன்று மாகாண அதிகார பீடத்தினால் உரிய அலுவலருக்கு வழங்கப்படும். அலுவலர் உரிய மாகாண அதிகாரபீடத்தினால் மாகாணத்திற்குள் இடமாற்றம் செய்யப்படுவதற்கும் உட்படுவார்.

(ஆ) மாகாண அரசாங்க சேவைக்கு விடுவிக்கப்பட்டாலும், குறித்த காலப்பகுதிக்குள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுக்கும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் ஆளாகுதல் வேண்டும்.

(இ) மாகாண அரசாங்க சேவைக்காக விடுவிக்கும் காலம் முடிவடைந்ததும் நிரந்தர சேவைக்கு மீளவும் வருதல் வேண்டும்.

3.4 இலங்கை விவசாய சேவையில் III ஆந் தரத்திற்கு நியமிக்கும்போது மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற அலுவலர்கள் 01 ஆண்டு கால பதில் கடமைக் காலத்துக்கும் உட்பட்டு நியமிக்கப்படுவர். மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் மூலம் நியமிக்கப்படுகின்ற அலுவலர்கள் 3 ஆண்டு காலத்துக்குள் முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

3.5 திறன் விருத்தி சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களுக்காக விவசாய அபிவிருத்திக்கு உரியதான சமூகப் பொருளாதார, கலாசார மற்றும் சேவையாற்றுகின்ற சூழலின் போக்குகள் தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான பயிற்சியொன்று விவசாயத் திணைக்களத்தினால் அல்லது திணைக்களம் அடையாளம் காணும் வேறு ஒரு நிறுவனத்தினால் (உதாரணமாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்) ஒரு (01) மாத கால பயிற்சிப் பாடநெறியொன்று வழங்கப்படும். பாடநெறி இறுதியில் மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீட்டின் பின்னர் சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும் பதவியில் உறுதிப்படுத்துவதற்கு இந்தச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.7 அரசாங்க சேவை நியமனங்களை நிருவகிக்கின்ற பொது நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இலங்கை விவசாய சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தபான விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கும், 2310/29 ஆம் இலக்க மற்றும் 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் (இதனகத்துப் பின்னர் நடைமுறை விதிகள் என அழைக்கப்படும்) மேலே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள், நிபந்தனைகள், ஒழுங்குவிதிகள், ஏற்பாடுகள் மற்றும் விதிகளில் ஏற்கனவே மேற்கொண்டுள்ள அல்லது. இதனகத்துப் பின்னர் மேற்கொள்ளவுள்ள திருத்தங்களுக்கும் உட்பட்ட வகையில் தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

3.3 நியமனதாரர்கள் 18/2020 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கும் ஏற்புடையவாறு உரிய மட்டத்தில் அரச கருமமொழி தேர்ச்சியினையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

4. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :**

இந்தப் பதவிகளுக்காக 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு அமைவாக இணைந்த மாதாந்த சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :

SL-01-2025 - ரூபா 82,150.00 - 2400 x 10 - 2940 x 8 - 3900 x 17 - ரூபா 195,970.00

இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

நியமனம் பெறுபவர்களுக்கு அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபம் 10/2025 இன் III ஆம் அட்டவணைக்கு அமைய சம்பளம் செலுத்தப்படும்.

5. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள்:**

5.1 **அடிப்படைத் தகைமைகள்:**

5.1.1 **விவசாய அபிவிருத்தித் துறைக்கு-**

(அ) இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட வகுப்பில் விவசாயப் போதனாசிரியர் பதவியை வகிக்கும் ஒரு அலுவலராக இருத்தல்;

(ஆ) இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் அல்லது மாகாண தொழில்நுட்ப சேவையில் ஆகக் குறைந்தது பத்து (10) வருடங்கள் செயலூக்கமுள்ள, திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள விவசாயப் போதனாசிரியர் பதவியை வகிக்கும் ஒரு அலுவலராக இருத்தல்;

அல்லது

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற விவசாய விஞ்ஞானம் தொடர்பில் நான்கு வருட பட்டம் ஒன்றைப் பெற்றுள்ள விவசாயத் திணைக்களத்தின் கடமைப்பொறுப்புக்களில்

நேரடியாக ஈடுபடுகின்ற அல்லது ஈடுபட்ட விவசாயத் திணைக்களத்தின் அல்லது மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் ஐந்து (05) வருட கால செயலூக்கமுள்ள, திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள திணைக்களம்சார் அலுவலர் சேவை வகுதியைச் சேர்ந்த ஒரு அலுவலராக இருத்தல்.

அல்லது

(ஈ) 10 ஆண்டுகள் செயலூக்கமுள்ள, திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள பூங்கா உதவியாளர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல்,

அல்லது

(உ) 5 வருட செயலூக்கமுள்ள, திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஒரு விவசாய விஞ்ஞான அல்லது விஞ்ஞான மானிப் பட்டத்தைப் பெற்றுள்ள விவசாயப் போதனாசிரியர் அல்லது பூங்கா உதவியாளர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல்.

5.1.2 **விவசாயப் பொருளியல் துறைக்கு-**

(அ) 5 வருட செயலூக்கமுள்ள திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள பொருளியல் உதவியாளர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல்;

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படுகின்ற விவசாயம் தொடர்பில் நான்கு வருட பட்டம் ஒன்றைப் பெற்றுள்ள விவசாயத் திணைக்களத்தின் செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடுகின்ற அல்லது ஈடுபட்ட விவசாயத் திணைக் களத்தின் கீழ் ஐந்து (05) வருட கால செயலூக்கமுள்ள, திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள திணைக்களம் சார் அலுவலர் சேவை வகுதியைச் சேர்ந்த ஒரு அலுவலராக இருத்தல்.

5.1.3 **விவசாய ஆராய்ச்சித் துறைக்கு :**

(அ) இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட வகுப்பின் ஆராய்ச்சி உதவியாளர் பதவியை, மண் வள ஆய்வாளர் மற்றும் காணி மதிப்பீட்டு அலுவலர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல்.

அல்லது

(ஆ) இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் ஆகக் குறைந்தது பத்து (10) வருட கால செயலூக்கமுள்ள, திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஆராய்ச்சி உதவியாளர் பதவியை, மண் வள ஆய்வாளர் மற்றும் காணி மதிப்பீட்டு அலுவலர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல்.

அல்லது

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படுகின்ற விவசாயம் தொடர்பில் நான்கு வருட பட்டம் ஒன்றைப் பெற்றுள்ள அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் தாவர வியல், இரசாயனவியல் அல்லது விலங்கியல் தொடர்பான நான்கு வருட சிறப்புப் பட்டம் பெற்றுள்ள விவசாயத் திணைக்களத்தின் அல்லது மாகாண விவசாயத் திணைக்களத்தின் செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடுகின்ற அல்லது ஈடுபட்ட விவசாயத் திணைக்களத்தின் அல்லது மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் ஐந்து (05) வருட கால செயலூக்கமுள்ள, திருப்திகரமான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள திணைக்களம் சார் அலுவலர் சேவை வகுதியைச் சேர்ந்த ஒரு அலுவலராக இருத்தல்.

அல்லது

(ஈ) 5 வருட செயலூக்கமுள்ள திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள விவசாய விஞ்ஞானம் அல்லது விஞ்ஞானப் பட்டம் பெற்றுள்ள ஆராய்ச்சி உதவியாளர் பதவியை, மண் வள ஆய்வாளர் மற்றும் காணி மதிப்பீட்டு அலுவலர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல்.

குறிப்பு :

1. இணை உத்தியோகத்தர் சேவை வகுதிக்குரிய பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர் விவசாய அபிவிருத்தி அல்லது விவசாயப் பொருளியல் அல்லது விவசாய ஆராய்ச்சி துறைகளில் ஒரு துறையின் கீழ் மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும்.

2. உயர்நீதிமன்ற விண்ணப்ப இலக்கம் 61/2006 இன் தீர்ப்புக்கு அமைய இலங்கை விவசாய சேவை தொடர்பிலான முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பு திருத்தப்பட்ட 1619/25 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக

சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2009.11.04 ஆம் திகதியன்று விவசாயக் கண்காணிப்பு அலுவலர் அல்லது நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (விவசாயம்) எனும் பதவியொன்றை வகித்து, ஐந்து (05) வருட செயலூக்கமுள்ள சேவைக் காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்துள்ள விவசாயக் கண்காணிப்பு அலுவலர் அல்லது நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (விவசாயம்) எனும் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர்களும், மட்டுப்படுத்தப்பட்ட ஆட் சேர்ப்பிற்காக விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவர். மேற்படி உத்தியோகத்தர்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பிற்காக விண்ணப் பிக்க இயலுமாவது விவசாய அபிவிருத்தி அல்லது விவசாயப் பொருளியல் அல்லது விவசாய ஆராய்ச்சி ஆகிய துறைகளில் ஒரு துறைக்கு மாத்திரமே ஆகும்.

5.2 **உடற் தகைமைகள் :**

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையில் எந்த வொரு பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடிய வாறான உடல் மற்றும் உளத் தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5.3 **வேறு தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை உடையவர்களாக இருந்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் தினத்தன்று அனைத்து தகைமைகளையும் சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:

(iii) விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதிக்கு பின்னர் விண்ணப்பதாரருக்கு கடந்த காலத்துக்கு உரியதாக செயல்வலுப் பெறும் வகையில் வழங்கப்படுகின்ற சலுகை அல்லது பதவியுயர்வுகள் என்பன பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக கருதப்படமாட்டாது.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகாது இருத்தல் வேண்டும்.

6. **விண்ணப்பிக்க வேண்டிய முறை:**

(அ) நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழி மூலம் மாத்திரம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை முறையில் அனுப்பி வைக்கப்பட்ட மென் பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பம் ஒன்றாக திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டமை தொடர்பில்/ பொறுப்பேற்கப்படாமை தொடர்பில் முறைமைக்குள் பிரவேசிப்பதற்காக பயன்படுத்தப் பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் ( E-Mail ) முகவரிக்கு அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்வதற்கு முன் பரீட்சைக்காக விண்ணப்பித்தல் தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள ஆலோசனைப் பத்திரத்தைப் (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் போது மேற்படி அறிவுறுத்தல்களை சரியான முறையில் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி ஒன்றினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தம் ஒன்றாக கவனம் செலுத்தப்படமாட்டாது. முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத மற்றும் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் தினத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(ஆ) இந்தப் பதவிகள் கீழே குறிப்பிடப்பட்டு உள்ளவாறு வகைப்படுத்தப்படும்.

வகை I - உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய அபிவிருத்தி)

வகை II - உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி)

வகை III - உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாயப் பொருளியல்)

(இ) பரீட்சைக் கட்டணம் ரூ. 1200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது நிகழ்நிலை முறைமையின் ஊடாக வழங்கப்படும் கீழேயுள்ள கட்டணங்களைச் செலுத்தும் வழிமுறைகளில் மாத்திரம் கொடுப்பனவினை மேற்கொள்ளல் வேண்டும்.

I. எந்தவொரு வங்கியினதும் கடன் அட்டை ஒன்றின் மூலம் (Any Bank Credit Card)

II. இணையத்தளக் கொடுப்பனவு வசதிகளைக் கொண்ட எந்தவொரு வங்கியினதும் பற்று அட்டை ஒன்றின் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transaction)

III. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமையின் ஊடாக /"Flex" உள்ளீட்டின் ஊடாக (Online Banking Method/"Flex" App of Bank of Ceylon)

IV. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் ஊடாகவும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:

(அ) மேற்படி முறைகளின் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் முறை தொடர்பான ஆலோசனைகள் வலைத்தளத்தில் பரீட்சைக்கு உரிய தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் பிரசுரிக்கப்பட்டு உள்ளன.

(ஆ) கொடுப்பனவுகள் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுஞ் செய்தி ஒன்றின் (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் செய்தி ஒன்றின் ஊடாக அறியத்தரப்படும். பரீட்சைக் கட்டணத்திற்குரிய முழுத் தொகையினையும் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணங்களைக் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு முறைகளின் ஊடாக பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப் படமாட்டாது.

(இ) பரீட்சைக்காக செலுத்தும் தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு ஒரு பரீட்சைக்காக மாற்றம் செய்யப் படவோமாட்டாது.

7. **பரீட்சைக்குத் தோற்றல்:**

7.1 பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தமது ஒப்பத்தை திணைக்களத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

பரீட்சார்த்தி ஒருவர் தமக்குரிய பரீட்சை நிலையத்தில் தமக்குரிய பரீட்சைக்கு தோற்ற வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரிய பரீட்சை நிலையத்திற்கு உரிய கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை முதலில் குறித்த மண்டபத்தில் தோற்றுகின்ற தினம் குறித்த பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். தமக்கு தோற்றுவதற்கு உரித்துள்ள பரீட்சையின் குறித்த விளாத்தாளுக்கு விடையளிப்பது ஒவ்வொரு பரீட்சார்த்தியினதும் பொறுப்பாகும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் இந்த வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கின்ற சட்டவிதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். அவ்வாறான சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற தண்டணைக்கு ஆளாகுதல் வேண்டும்.

7.2 பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டையை வழங்குவது அவர் பரீட்சைக்குத் தேரற்றுவதற்கான தகைமையைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொள்வதாகக் கருதப்படுதல் கூடாது.

7.3 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை பெற்றவர்கள் மாந்திரம் விண்ணப்பித் திருப்பார்கள் என்ற தீர்மானத்தின் கீழ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங் களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று அல்லது அத்தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணை யாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் நிகழ்நிலை முறையில் மாந்திரம் வழங்கப் படும். பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட உடனே அது தொடர்பாகக் குறிப்பிட்டு வலைத்தன அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கழிந்த பின்னரும் கூட தனது அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் தாபனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றை சரியான முறையில் குறிப்பிட்டு வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனும் தகவல் ஒன்றினை உறுதிப் படுத்துவதற்காக தம்வசம் வைத்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதன் பின்னர் கிடைக்கப்பெற்ற பற்றுச்சீட்டின் பிரதி என்பவற்றை ஆயத்தமாக வைத்திருப்பதும் பயனுள்ளதாக இருக்கும்.

8. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்தி தான் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தி யுறும் வண்ணம் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடை யாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக கீழே காட்டப்பட்டுள்ள ஏதேனும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

i. தேசிய ஆளடையாள அட்டை;

ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;

iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகக் கவசமின்றியும் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணியவில்லை என்பது தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகள் என்பவற்றினை மறைக்காது பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத் திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்த நேரம் தொடக்கம் பரீட்சை நிறைவுபெற்று வெளியேறும் வரை முகம் மற்றும் இரண்டு காதுகளை மறைக்காது இருத்தல் வேண்டும்.

9. **பரீட்சை வழிமுறை :**

9.1 **பரீட்சை மொழி மூலம் :**

பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி களில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது.

9.2 பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுகின்ற அனைத்து வினாத்தான்களுக்கும் ஒரு மொழியில் மாத்திரமே விடையளித்தல் வேண்டும்.

10. **போட்டிப் பரீட்சை நடைமுறை மற்றும் பாடப்பரப்பு :**

அனைத்து விண்ணப்பதாரர்களும் முதலாவது பின்னி ணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பாடப்பரப்பிற்கு ஏற்ப 1 ஆவது மற்றும் 2 ஆவது வினாத்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

ஒவ்வொரு பதவிக்கும் உரிய பாடப் பரப்புக்கள் முதலாவது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டு உள்ளன.

11. விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றும் சந்தர்ப்பத்தில் அவர்கள் தங்களது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை உறுதிப் படுத்தவதற்காக சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

12. **பொய்யான தகவல்களை வழங்குதல் :**

பரீட்சார்த்தியொருவர் இந்தப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தத்தன்மையினை இரத்து செய்வதற்கு இடமுண்டு. பரீட்சார்த்தி ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் ஒரு விடயம் போலியானது என அல்லது ஏதும் முக்கியமான விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என நியமனம் வழங்கப்பட்ட பின்னர் தெரியவரும் பட்சத்தில் அது அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்குவதற்கு காரணமாக அமையலாம்.

பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயத்தினால் பிறப்பிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். குறித்த சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படும் தண்டனை ஒன்றிற்கு ஆளாக வேண்டி ஏற்படும்.

13. இதில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதும் விடயங்கள் காணப்படின் அது தொடர்பிலான இறுதித் தீர்மானம் நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

14. நிலவுகின்ற வெற்றிடங்கள் அனைத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை நிரப்புவது/ நிரப்பாமல் இருப்பது தொடர்பிலான இறுதித் தீர்மானம் நியமன அதிகாரியினாலேயே மேற்கொள்ளப்படும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தல்களில் மொழி களுக்கிடையே எதும் ஒவ்வாமை அல்லது பொருத்த மின்மை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி அறிவித்தல் சரியெனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

டீ. பி. விக்ரமசிங்ஹ,
செயலாளர்,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீரப்பாசன அமைச்சு.

ரஜமல்வத்தை ஒழுங்கை, பத்தரமுல்ல,
2026.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

## இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2024 (2026)

(அலுவலக உபயோகத்திற்கு)

| விண்ணப்பிக்கின்ற பரீட்சைக்குரிய பதவி (வர்த்தமானி அறிவித்தலில் 1 ஆவது மற்றும் 5 ஆவது பந்திகளைப் பார்க்கவும்) | |
|---|---|
| பதவி | பதவிக் குறியீடு |
| | |

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
(வர்த்தமானியின் அறிவித்தலில் 10 ஆவது பந்தியை பார்க்கவும் - உரிய இலக்கத்தை கூட்டுக்குள் குறிப்பிடவும்)

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி) பதவிக்காக விண்ணப்பிப்பதாயின் விடையளிப்பதற்கு தெரிவு செய்கின்ற பகுதி (முதலாவது பிண்ணினைப்புக்கு அமைவாக (அ) எனின் கூட்டுக்குள் “1” எனவும் (ஆ) எனின் கூட்டுக்குள் “2” எனவும் குறிப்பிடுக. இதனை பின்னர் மாற்றம் செய்ய முடியாது.

01. (i) முழுப் பெயர்: (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..............................................

உதா. : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDENA

(ii) இறுதியாக வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னர் வரும் வகையில் பெயர் : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): ..............................................

(உதா : GUNAWARDENA, H.M.S.K.)

02. (i) நிரத்தர வதிவிட முகவரி : (பரீட்சை அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அனுப்பப்படும்)

(அ) (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): ..............................................

(ii) அலுவலக முகவரி : (அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவவர் ஒருவராயின், அவரின் அலுவலக முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் ஏதும் மாற்றம் ஏற்படுமிடத்து அதனை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)

(அ) (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): ..............................................

03. ஆண்/பெண் பால் தன்மை : (முன்னே உள்ள கூட்டுக்குள் உரிய இலக்கத்தை இடவும்)

ஆண் - 0
பெண் - 1

04. தேசிய ஆளடையாள அட்டை இல.:

05. கையடக்கத் தொலைபேசி இல. :

06. (i) பிறந்த திகதி : வருடம்: மாதம் : திகதி:

(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது:

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

07. இலங்கை பிரசையா என்பது பற்றி : (உரிய கூட்டுக்குள் புள்ளடி இடுக) :

ஆம் ☐ இல்லை ☐

08. **கல்வித் தகைமைகள் :**

8.1 பட்டப் படிப்புத் தகைமைகள்:

| *பெற்றுள்ள பட்டம் / பட்டங்கள்* | *பெற்றுள்ள பட்டம்/ பட்டங்கள் நான்கு ஆண்டுகளைக் கொண்ட பட்டமா/ பட்டங்களா என்பது* | *கல்வியாண்டு மற்றும் குறித்த பட்டம் செல்லு படியாகும் திகதி (தெளிவாகக் குறிப்பிடுக)* | *பல்கலைக்க முகம் / கல்லூரி* | *பாடங்கள்* | *சித்தி* | *மொழி மூலம்* |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |

09. இதற்கு முன்னர் இலங்கை விவசாய சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றியுள்ளீரா? தோற்றியிருப்பின் தோற்றிய ஆண்டு/ ஆண்டுகளைக் குறிப்பிடுக. ..........................................................

10. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை பரீட்சார்த்திகள் அறிவித்தலில் 5 ஆவது பந்தியின் கீழ் இப்பரீட்சைக்கு தகுதி பெறுவதற்கான தகைமையினை இங்கு கீழே குறிப்பிடவும்.

| தற்போதைய பதவி | மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் கீழ் தகுதி பெறுகின்ற பதவி | உ.வி.ப. (விவசாய அபிவிருத்தி) உவி.ப. (விவசாய ஆராய்ச்சி) அல்லது உ.வி.ப. (விவசாயப் பொருளியல்) பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகை மைகளை பூர்த்தி செய்கின்ற திகதி (வர்த்தமானி அறிவித்தலில் 5.1 இல் தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற திகதி) |
|---|---|---|
| 1. ஆராய்ச்சி உதவியாளர்<br>2. மண் வள ஆய்வு அலுவலர்<br>3. காணி மதிப்பீட்டு அலுவலர்<br>4. விவசாயப் போதனாசிரியர்<br>5. பொருளியலாளர் உதவியாளர்<br>6. பூங்கா உதவியாளர்<br>7. திணைக்களம் சார் அலுவலர்கள் சேவை வகுதி (பதவியைக் குறிப் பிடுக) | 1. உவி.ப.(விவசாய ஆராய்ச்சி)<br>2. உ.வி.ப. (விவசாய அபிவிருத்தி)<br>3. உ.வி.ப. (விவசாயப் பொருளியல்) | |

11. நீங்கள் பெற்றுக்கொண்ட உள்நாட்டு /வெளிநாட்டு சம்பளமற்ற கற்கை விடுமுறைகள் அல்லது அரசின் ஏனைய சேவைகளுக்கு விடுவிக்கப்பட்டு இருப்பின் அல்லது உள்நாட்டு /வெளிநாட்டு ரீதியில் ஏதேனும் ஒரு சம்பளமற்ற விடுமுறைகளைப் பெற்றுக்கொண்டு இருப்பின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்.

..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

12. நீதிமன்றம் ஒன்றிற்கு முன்னால் நீங்கள் ஏதேனும் குற்றம் ஒன்றிற்கு குற்றவாளியாக்கப்பட்டு உள்ளீரா : ஆம்/இல்லை.

ஆம் எனின், விபரங்களைக் குறிப்பிடவும்.

.......................................................................................................................................................................
.......................................................................................................................................................................

13. **பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் விபரங்கள்** :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபாலகம் :.......................................................................................................

(ii) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :..............................................................................................................

(iii) செலுத்திய தொகை :...........................................................................................................................................

| பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டை இக்கூட்டினுள் கழன்றுவிடாதவாறு ஒரு பக்கத்தை மாத்திரம் ஒட்டவும் (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம் வசம் வைத்துக் கொள்ள வேண்டும்) |
|---|

14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :-

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களில் எதும் போலியானது அல்லது தவறானது என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் அறியவரும் பட்சத்தில் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அது பற்றி தெரியவரும் பட்சத்தில் எனது நியமனம் உடனடியாக இரத்துச் செய்யப்படும் எனவும், விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது ஏதும் தாமதம் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் அதன் பொறுப்பை நானே ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் நான் நன்கு அறிவேன். மேலும் பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கின்ற சட்ட விதிகளுக்கும் நான் கட்டுப்படுகின்றேன். மேலும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதெனவும், நான் ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே சமர்ப்பித்துள்ளேன் எனவும் இத்தால் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திகதி :...................................................  ..........................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

14. **திணைக்களத் தலைவரின் /அமைச்சுச் செயலாளரின் சான்றிதழ்** :

திரு./திருமதி/செல்வி ........................................................................................ அவர்கள் இத்திணைக்களத்தில் / மாகாண சபையில் / அமைச்சில் .................................... ஆக சேவையாற்றுகின்றார் எனவும், அவரின் வேலை, நடத்தை திருப்திகரமாகவுள்ளது எனவும், உடன் முன்னரான 05 ஆண்டு காலத்துக்குள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார் / பெறவில்லை எனவும், இப் பதவிக்குரிய 5.1 ஆம் பந்தியின் அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் எனவும், அவர் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு அனைத்து விதத்திலும் தகைமை பெற்றுள்ளார் எனவும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது/எடுக்கப்படவில்லை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் தெரிவு செய்யப்படுமிடத்து தற்பொழுது வகிக்கின்ற பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. தேவையற்ற பதங்களை வெட்டி விடுக.)

..........................................................................
திணைக்களத் தலைவரின் /மாகாண திணைக்களத்
தலைவரின்/அமைச்சுச் செயலாளரின் கையொப்பம்

பெயர்: ...................................................

பதவி: ...................................................

முகவரி: ...................................................

திகதி : ...................................................
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

**முதலாவது பின்னிணைப்பு**

**மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகள் மற்றும் பாடப்பரப்பு**

**1 ஆம் வினாத்தாள் - நுண்ணறிவு**

இது மொழி, கணிதம் மற்றும் தர்க்கிக்கும் ஆற்றல்களைப் பரிசீலித்துப் பார்ப்பதற்கான வினாக்கள் அடங்கிய ஒரு பல்தேர்வு வினாத்தாள்/குறு வினாத்தாள் ஆகும். நேரம் 1 1/4 மணித்தியாலம் ஆகும். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

**2 ஆவது வினாத்தாள் விடய ஆய்வினை அளவிட்டுப் பார்த்தல்.**

இது குறித்துரைக்கப்பட்டு உள்ள பாடத்துறை பற்றிய அறிவைப் பரிசீலிப்பதற்காக நடாத்தப்படும் பதவிக்கு உரிய ஒரு எழுத்து மூல உளச்சார்புப் பரீட்சையாகும். ஒவ்வொரு விண்ணப்பதாரரினாலும் தான் விண்ணப்பிக் கின்ற பதவிக்கு அல்லது பதவிகளுக்குப் பொருத்தமான விதத்தில் அவர்கள் கீழ்க்காணும் வினாத்தாள்களில் தேர்ந் தெடுக்கப்படும் வினாத்தாள்களுக்குத் தோற்றுவதற்கு அனு மதிக்கப்படுவார்கள். இந்த வினாத்தாள் குறு வினாக்களையும் பல்தேர்வு வினாக்களையும் உள்ளடக்கியிருக்கும். நேரம் 2 மணித்தியாலங்கள் ஆவதுடன் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

**குறிப்பு**: கீழ்க்காணும் பாடப்பரப்பிற்கு அமைய மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் போது விடய ஆய்வு வினாத்தான் குறிப்பிட்ட துறையிலான அனுபவத்திற்கு கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுத் தயாரிக்கப்படும் பரீட்சை ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும் விதத்திற்கு அமைய பரீட்சை நடாத்தப்படும்.

ஒவ்வொரு பதவிக்குரிய பாடப்பரப்பு கீழே குறிப்பிடப்பட்டு உள்ளது.

1. **விவசாய ஆராய்ச்சித் துறைக்கான பாடப்பரப்பு:**

விண்ணப்பதாரர்களினது விருப்பத்தின் பேரில் கீழ்க்காணும் (அ), (ஆ) - ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 02 பகுதிகளில் ஒரு பகுதிக்கு மாத்திரம் விடையளித்தல் வேண்டும் :

(அ) பகுதி

01. **விவசாயத் தாவரவியல் :**

தாவர வகைப்பாடு பற்றிய கோட்பாடுகள் தாவரங்களின் வளர்ச்சி மற்றும் பௌதீகவியல் கோட்பாடுகள்.

02. **மரபணுவியல் மற்றும் தாவர இனப்பெருக்கம் :**

மெண்டலின் நியதி, சனத்தொகை மரபணுவியல், மாற்று மரபணுவியல், கல மரபணுவியல், அளவீட்டு மரபணுவியல், தாவர இனப்பெருக்கக் கொள்கைகள், மரபணு வளங்கள் பாதுகாப்பு, உயிர் பல்வகைமைத் தன்மை, மகரந்தச் சேர்க்கை மற்றும் இனப்பெருக்கக் கோட்பாடுகள், விகாரமடைதல், கலப்பின மற்றும் கலப்பினமற்ற தாவரங்கள், பரந்தளவில் பயன் படுத்தப்படுகின்ற தாவர இனப்பெருக்க முறைகள் மற்றும் தற்போதைய போக்குகள்.

03. **தாவர நோயியல் :**

நோய்க் கிருமிகளின் வகை, தொற்றுகள், அவற்றிற்கு பயிர்கள் காட்டும் கூருணர்வு, தொற்றுகின்ற விதம் மற்றும் இவற்றைக் கட்டுப்படுத்தும் கோட்பாடுகள், தாவர நோயியலும் நோய்க் கட்டுப்பாடும் பற்றிய தற்போதைய போக்குகள், நோயைக் கண்டறியும் நுட்பங்கள். நோய் பண்பியல்பியல், கொக்கிக் கருதுகோள் பிரயோகம், நோய் கண்டறியும் நவீன நுட்பங்கள் (ELISA) மற்றும் தற்போதைய போக்குகள்,

04. **பூச்சியியல் கோட்பாடு :**

விலங்கியல் பாகுபாட்டுக் கோட்பாடுகள், கிருமி வகைகளின் இயல்பு, வாழ்க்கை வட்டத் தகவல்கள், பாதிப்புகள், பூச்சி அழிவின் பொருளாதார முக்கியத்துவம் பூச்சிகளின் குடித்தொகை அழிவு பற்றிய மதிப்பீடு.

05. **விதைத் தொழில்நுட்பம் :**

விதைப் பௌதீகவியல், விதைக் கட்டமைப்பு, உறங்கு நிலை, முளைத்தல், உயிர் வாழ்தல், நம்பகத்தன்மையும் தூய்மை பற்றிய சோதனையும், விதை உற்பத்திக் கட்டங்கள், விதைகளை அத்தாட்சிப்படுத்தல், விதை களைக் களஞ்சியப்படுத்தல்.

06. **இழையவியல் :**

கோட்பாடுகள், இழைய வளர்ப்பு வசதிகளும், தேவை களும், ஊடகங்கள், இழைய வளர்ப்பு முறைகளின் பிரயோகங்கள், முதலுரு தாவர வளர்ப்பு முறை, விகாரமடைந்து புதிதாகத் தோன்றுதல், கரு மீட்பு, செயற்கை கருத்தரிப்பு, மரபணுப் பரிணாமங்கள், கதிரியக்கப் பாதுகாப்பு.

07. **விவசாய இரசாயனவியல் :**

உயிர் இரசாயனவியல் கோட்பாடுகள் மற்றும் விவசா யத்தில் உயிர் இரசாயனவியலின் செயல்முறைப் பிரயோகங்கள், உணவு இரசாயனவியல் பற்றிய கோட்பாடுகள், விவசாய உணவு இரசாயனவியலின் செயல்முறைப் பிரயோகங்கள், பகுப்பாய்வு ரீதியான இரசாயனவியல் பற்றிய கோட்பாடுகள், விவசாயத்தில் காணப்படும் செயல்முறைப் பிரயோகங்கள்.

அல்லது

(ஆ) பகுதி

01. **விவசாயத் தாவரவியல் :**

விவசாயக் காலநிலையியல், சுற்றாடல், நில அபிவிருத்தி, நிலப் பண்படுத்தல், பயிர் வளர்ச்சியும் பௌதீகவியலும் பற்றிய கோட்பாடுகள் பயிர் வளர்ச்சி

அளவீடு, அறுவடைச் சுட்டிகள் பசளையின் சிபாரிசும் வினைத்திறனும், களை உயிரியலும் கட்டுப்பாடும், நீர்ப்பாசன முறைகள் பற்றிய கோட்பாடுகள், பயிர்ச் செய்கை, மண் மற்றும் நீர் தொடர்புகள் பற்றிய கோட்பாடுகள்.

02. **பயிர் விஞ்ஞானம் :**

நெல், மேட்டு நிலத் தானியப் பயிர்கள், அவரைப் பயிரினங்கள், கிழங்குப் பயிர்கள், மற்றும் ஏனைய களப் பயிர்கள் என்பவற்றின் பௌதீகவியல், பரவல் முறைகள், தாவர நடுகை முறைகள், பயிர்கள் பராமரிப்பு பௌதீகவியல் இரசாயன உயிரியல் முறை, விஞ்ஞான ரீதியில் செயற்கைப்புல் நிலங்களை அமைத்தல், அவற்றைப் பராமரித்தல், மர உற்பத்தி பழ உற்பத்தி பற்றிய கோட்பாடுகள்.

03. **மண்ணியல் :**

மண் உருவாக்கம், மண்ணின் பௌதிக மற்றும் இரசாயனப் பண்புகள், பயிர்கள் சம்பந்தமான மண்ணிலுள்ள பிரச்சினைகள், மண் வளப் பராமரிப்பு, நீரேந்து பிரதேசங்களை நிருவகித்தல், நடுகைக் கன்றுகளின் போசணை, நடுகைக் கன்றுகள் வகைப் படுத்தல் பற்றிய கோட்பாடுகள்.

04. **மரபணுவியல் மற்றும் தாவர இனப்பெருக்கம் :**

கோட்பாடுகள், மென்டலின் நியதி, மரபணுவியல் இனப்பெருக்கம், விகாரங்கள். மூலக்கூறு மரபணுவியல், தாவர இனப்பெருக்கக் கோட்பாடு, மரபணுக்களைப் பாதுகாத்தல் மற்றும் உயிர் பல்வகைமை.

05. **தாவர நோயியல்** :

தாவர நோய்கள், நடுகைக் கன்றுகள் நோய்த் தொற்றுக்களுக்கு ஈடுகொடுக்கும் விதம், உயிரியல் கட்டுப்பாடு, நோய்க் கட்டுபாட்டு நவீனப் போக்குகள்.

06. **பூச்சியியல் அடிப்படைக் கோட்பாடுகள் :**

(அ) வினாத்தாளின் 04 ஆம் உப பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி இதற்கு உரியதாகும்.

07. **கள ஆராய்ச்சிக் கோட்பாடுகள் மற்றும் கோட்பாடுகள்**: (Statistical Principles), இலங்கையின் விவசாயத் துறையினது முக்கியமான புள்ளி விபரங்கள் பற்றிய அறிவு.

08. **பூச்சியல் :**

விவசாயத்தில் காணப்படுகின்ற பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பூச்சிகள், அவற்றின் வகுதிகள், உள்ளக மற்றும் வெளியகப் பண்புகள், பல முறைமை களின் கட்டமைப்பும் மற்றும் அவற்றின் தொழிற் பாடுகளும், பீடைக் கட்டுப்பாடு பீடைகளின் அழிவு முக்கியத்துவம் பீடைகளை இனங்காணுதல் அவற்றின் பாதிப்புகளும் கட்டுப்பாடுகளும், ஒன்றிணைந்த பீடைக் கட்டுப்பாடு.

09. **நுண்ணுயிரியல் :**

நுண்ணங்கிகள் மற்றும் விவசாயம் சார்ந்த சுற்றாடல், உயிரியல் தொழில் நுட்ப விவசாயத்துக்கான பயன்பாடு, மண்ணிலுள்ள நுண்ணங்கிகளும் விவசாயத்தின் மீது அவற்றின் தாக்கங்களும்.

10. **உயிரினப் புள்ளிவிபரவியலும், பிரயோகப் புள்ளிவிபரங் களும் :**

புள்ளிவிபரவியல் சம்பந்தமான அடிப்படை அறிவு, விவசாய ஆராய்ச்சித் திட்டப் பகுப்பாய்வு, தாவுகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் பகுப்பாய்வுகள்.

**குறிப்பு :**

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் ஊடாக உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி) பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் சகல பரீட்சார்த்திகளும் மேற்குறித்த (அ) அல்லது (ஆ) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 02 பகுதிகளில் ஏதாவது ஒரு பகுதிக்கு மாத்திரம் விடையளிப்பது அவசியமாகும்.

**II விவசாய அபிவிருத்தித் துறைக்கான பாடத்திட்டம்**

01. **பொது விவசாயம்**

இலங்கையின் காலநிலை வலயங்கள், காணிகள் அபிவிருத்தி நிலத்தைப் பண்படுத்துதல் மற்றும் உபகரணங்கள், பயிர்கள் தாபிப்பு அதற்குத் தேவையான இயந்திர உபகரணங்கள், மண்ணும், மண் வளமும், நாற்று மேடைகளும் நாற்று மேடைப் பராமரிப்பும், தாவர மூலப்பொருட்கள், பூச்சிகள் கட்டுப்பாடு, தாவர நடுகைக் கன்றுகள் பாதுகாப்பு உபகரணங்கள், பயிர்ச் செய்கை முறை, நீர்ப்பாசன முறை, ஒன்றிணைந்த விவசாயம், பாதுகாப்பு விவசாயம், நுண் நீர்ப்பாசன முறை, அறுவடையும் அறுவடை உபகரணங்களும், அறுவடைக்குப் பின்னர் நிகழும் இழப்புகள், பண்ணை சார்ந்த உற்பத்திகள் தயாரிப்பு, விசேட பிரதேசங்களில் பயிரிடுவதற்குப் பொருத்தமான மரக்கறிப் பயிர்கள், பழப் பயிர்கள், உலர் வலயப் பயிர்கள் மற்றும் தானியத்தைத் தேர்ந்தெடுக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள், ஒன்றிணைந்த பீடைக்கட்டுப்பாடு, ஒன்றிணைந்த தாவர ஊட்ட முறைமைகள், தாவரப் பாதுகாப்பு பற்றிய சட்டங்கள், மண் பாதுகாப்பு பற்றிய சட்டம்.

02. **பயிர் உற்பத்தி :**

உழவியல்,விவசாயக் காலநிலை வலயங்கள் மற்றும் சுற்றாடல், நில அபிவிருத்தி மற்றும் பண்படுத்தல், பயிர்களின் வளர்ச்சிக் கோட்பாடு மற்றும் நடுகைக் கன்றுகளின் பௌதீகவியல், பயிர்களின் வளர்ச்சியை அளவிடுதல், அறுவடைச் சுட்டிகள், பசளைகளின் சிபாரிசு, பசளைகளின் வினைத்திறன், களைத் தாவரங்களின் உயிரியல் கட்டுப்பாடு, நீர்ப்பாசனம், விவசாயவியல் பயிர்கள் மற்றும் நீர் என்பனவற்றுக்கு இடையிலுள்ள தொடர்புகள் பற்றிய கோட்பாடுகள்.

03. **களப் பயிர்கள் :**

அறிமுகம், சுற்றாடல் தேவைப்பாடுகள், தாவர வகுதிகள் மற்றும் இனங்கள், நடுகைக்கன்று வளர்ச்சி, பௌதிகவியல், விளைச்சலை நிர்ணயிக்கும் பௌதீகவியல் கோட்பாடுகள், நெற்பயிரின் விவசாயவியல், பயிர் பராமரிப்பு மற்றும் உற்பத்திகள், மேட்டுநிலத் தானியங்கள், பயிரினங்கள், கிழங்குப் பயிர்கள் மற்றும் ஏனைய முக்கியமான களப் பயிர்கள். (புகையிலை, வெங்காயம், நார் தாவரங்கள் மற்றும் எண்ணெய் தரும் பயிர்கள்).

04. **பயிர்கள் பராமரிப்பு :**

துணைப் பயிர்ச் செய்கை, அறுவடை மற்றும், பதனிடல்.

05. **தோட்டப் பயிர்கள் உற்பத்தி :**

பழங்கள் உற்பத்தி, போசணை பெறுமானம், சமூகப் பொருளாதாரக் காரணிகள், ஆரம்பம் மற்றும் விரிவாக்கம், சுற்றாடல் தேவைப்பாடுகள், பயிர்ச்செய்கை முறை, நவீன தொழில்நுட்ப முறைகளின் பாவனை.

06. **பழ வர்க்கங்கள், மரக்கறி வகைகள் மற்றும் பூக்கள் உற்பத்தி :**

நாற்றுமேடைப் பராமரிப்பு, தோட்டப் பயிர்கள் பராமரிப்பு, பயிர்கள் சார் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பயிர்ச்செய்கை முறைகள், பழப் பயிர்களினதும் மரக்கறிப் பயிர்களினதும் பயிர்ச் செய்கை மேம்பாடு, பழ வர்க்கங்களையும் மற்றும் மரக்கறி வகைகளையும் அடிப்படையாகக் கொண்ட பயிர்ச்செய்கை முறைகள், அறுவடைக்குப் பின்னர் நிகழும் இழப்புகள், பழ வர்க்கங்களினதும் மற்றும் மரக்கறி வகைகளினதும் அறுவடைக்குப் பின்னர் நிகழும் இழப்புகளைத் தவிர்த்துக் கொள்ளுதல், உயிரியல் தொழில்நுட்பம், பழ வர்க்கங்களுக்கும், மரக்கறி வகைகளுக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் நிலவும் சந்தை வாய்ப்புகள், நவீன வரையறைகள் மற்றும் எதிர்காலத் தந்திரோபாயங்கள், மரக்கறி உற்பத்திக்கான தேவைகள், மரக்கறி வகைகளை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச் செய்கை முறைகள், சந்தைப்படுத்தல். பூ உற்பத்தி சார்ந்த கைத்தொழில்கள், விளம்பரத் தொழில்நுட்பம், பயிர்ச் செய்கை முறைகள், உன்னத நியமங்கள், நில வடிவமைப்பு பற்றிய கோட்பாடுகள்.

07. **விவசாய விரிவாக்கமும் பயிற்சியும் :**

விவசாய விரிவாக்கம் பற்றிய வரைவிலக்கணம் அவற்றின் குறிக்கோள்கள், விவசாய கைத்தொழில் அபிவிருத்தி விவசாய விரிவாக்கம், கண்டுபிடிப்புகளைப் பின்பற்றுதல் மற்றும் பரப்புதல், தொடர்பாடல், விரிவாக்கம் பற்றி போதிக்கும் முறைகள், இலங்கையில் பயன்படும் விரிவாக்க அணுகுமுறைகள் ஆராய்ச்சி விரிவாக்கம் சம்பந்தமான தொடர்புகள், விரிவாக்கம் சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடல், மீளாய்வு மற்றும் மதிப்பீடு, இலங்கையின் விவசாய விரிவாக்கம் மற்றும் அதனுடன் சம்பந்தப்படும் நிறுவனங்கள், முதியோர் கல்வி, பயிற்சிசார் நடைமுறைகள், பயிற்சி சார்ந்த தேவைப்பாடுகளைக் கண்டறிந்து கொள்ளும் பொருட்டு பயன்படும் பல வழிமுறைகள், பாடத்திட்டங்களைத் தயாரித்தல், பயிற்சிகள் பற்றிய மதிப்பீடு, பயிற்சிகளுக்கான கற்புல செவிப்புல சாதனங்கள் பயன்பாடு.

08. **விதைத் தொழில்நுட்பம் :**

விதைகளின் பௌதிகவியல், விதைக் கட்டமைப்பு, விதையின் உருவமைப்புகள், விதை முளைத்தல், விதை முளைதிறன், விதைகள் பரிசோதனை, விதைகள் முளை திறன் மற்றும் விதைத் தூய்மை பற்றிய பரிசோதனை, விதை உற்பத்திக் கட்டங்கள், விதைகளை அத்தாட்சிப்படுத்தல், விதைகள் களஞ்சியப்படுத்தல்.

09. **தேனீ வளர்ப்பு :**

ஒரு தேன் கூட்டிலுள்ள தேனிக்களின் வகை மற்றும் தேன் வதைகள், தேனீ வளர்ப்புப் பெட்டிகளின் பாங்கள், தேனீக்களைப் பிடித்து நிலைப்படுத்தல், கூண்டினுள் அடைத்து வளர்த்தல், வகைப்படுத்தல், ஒரு தேன் கூட்டிலுள்ள பீடைகள் மற்றும் நோய்கள்.

### III. விவசாயப் பொருளியல் துறைக்கான வினாத்தாள்

01. **விவசாய உற்பத்திகள் பொருளியல் மற்றும் பண்ணைகள் பராமரிப்பு :**

விவசாய உற்பத்தியின் போது பண்ணைகள் பராமரிப்பிலுள்ள முக்கியத்துவம், அடிப்படை எண்ணக்கரு உற்பத்தித் தொழிற்பாடுகள், உற்பத்தித் தொழிற்பாடுகள் அமைப்பு, உற்பத்திப் பரப்புகள், உற்பத்தித் தொழிற்பாட்டு வடிவங்கள், உற்பத்தி அலட்சிய வளைவு, சமநிலை வருமான வரிசை, வளங்கள் இணைப்பு மற்றும் செலவுகளைக் குறைத்தல் பற்றிய கோட்பாடுகள், பிரதியீடு மற்றும் வருமான விளைவுகள், விவசாயத்திலுள்ள ஆபத்து மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் என்பவற்றுக்கு முகங்கொடுப்பதற்கான உற்பத்தித் தயாரிப்பு நெகிழ்வு மற்றும் பல்லுயிரினத் தன்மை, விவசாயப் பொருட்களுக்கான விசேட விலையை நிர்ணயிக்கும் தத்துவம், தாவரங்கள் மற்றும் விலங்குகள் என்பவற்றின் இணைந்த கூறுகள் பற்றிய மதிப்பீடு, பண்ணை ஸ்தலங்கள் மற்றும் அளவு பயன் கூட்டுப் பண்ணைகளின் முக்கியத்துவம் மற்றும் ஒப்பீட்டு நன்மைகள் பற்றிய கோட்பாடுகள், பண்ணைகளின் பொறிமுறை சார்ந்த சக்தி மற்றும் பலவீனங்கள் முதலிய விடயங்களை நிர்ணயிக்கும் அறிக்கைகளிலுள்ள முக்கியத்துவம் மற்றும் அனுகலப்படுத்தும் மாதிரிகளில் இந்தத் தகவல்களை உள்ளடக்குதல்.

02. **விவசாய சந்தைப்படுத்தல் :**

சந்தைப்படுத்தல் கோட்பாடுகள் மற்றும் உற்பத்தி யினதும், சந்தைப்படுத்தலினதும் ஒப்பீட்டு ரீதியான

முக்கியத்துவம், இலங்கையில் சந்தைப்படுத்தல் விடயத்துடன் சம்பந்தப்படும் நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் வழிமுறைகளின் வளர்ச்சியின் விளைவுகளை ஏற்படுத்துவதில் அத்தகைய நிறுவனங்களின் பங்களிப்புகள், இலங்கையின் விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் எதிர்நோக்குவதற்கு நேரிடுகின்ற பிரச்சினைகள் மற்றும் சந்தைப்படுத்தல் வினைத்திறன் மேம்பாடு பற்றிய கோட்பாடுகள்.

03. **காணிப் பொருளியல் :**

பொருளாதார விஞ்ஞான எண்ணக்கருக்கள், நிலப் பாவனையில் செல்வாக்குச் செலுத்தும் விதங்கள், இலங்கையில் காணிகளுக்கான கேள்வி மற்றும் நிரம்பல், காணிகள் பரிசீலனை விடயங்கள் இலங்கையில் திட்டமிடப்படும். விதங்கள், இலங்கையில் விவசாயக் குடியேற்றங்களைத் தாபித்தல் மற்றும் மக்களைக் குடியேற்றுதல் சம்பந்தமான நிகழ்ச்சித் திட்டங்களின் முக்கியத்துவம்.

09-164

---

## தொழில்நுட்பவியல் நிறுவகம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

## தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான அனுமதி – 2026/2027

தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்படும் மூன்று (03) வருடகால முழுநேர தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவு செய்வதற்காக தகுதிவாய்ந்த விண்ணப்ப தாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக்கற்கை நெறியானது, தியகம, ஹோமாகமவில் அமைந் துள்ள தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்தப்படும்.

1. **பொதுவானவை :**

தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறி யானது, இரண்டு வருட முழுநேர கற்றலையும், ஒரு வருட தொழிற்பயிற்சியையும் உள்ளடக்கியது. இதன் கற்கைமொழி ஆங்கிலம் ஆகும். கற்கைநெறிகள் பின்வரும் கற்கைத்துறைகளில் வழங்கப்படுகின்றது :

(அ) **கடல்சார் கற்கைநெறிகள் (வகை I)**

(i) கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம்
(ii) கப்பற்துறை கல்வி

(ஆ) **ஏனைய கற்கைநெறிகள் (வகை II)**

(i) இரசாயன பொறியியல் தொழில்நுட்பம்
(ii) குடிசார் பொறியியல் தொழில்நுட்பம்
(iii) மின்சார பொறியியல் தொழில்நுட்பம்
(iv) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் தொழில்நுட்பம்
(v) தகவல் தொழில்நுட்பம்
(vi) இயந்திரவியல் பொறியியல் தொழில்நுட்பம்
(vii) பல்பகுதிய தொழில்நுட்பம்
(viii) புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம்

2. **தகைமைகள் :**

2.1. **வயது மற்றும் தகைமைகள்:**

2.1.1. விண்ணப்பதாரிகள் 31.12.2025 ஆந் திகதியன்று 24 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்;

2.1.2. 31.12.2025 இல் 20 வயதுக்குக் குறைந்த விண்ணப்பதாரர்களுக்குக் கப்பற்துறைக் கல்வி கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகளுக்கான அனுமதிக்கு முன்னுரிமை வழங்கப்படும். கடல்சார் பொறியியல் தொழில் நுட்ப கற்கைநெறிகள் (வகை I) இற்கான விண்ணப்பதாரிகள் மருத்துவ பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றுக்கு விசேடமாக தோற்றுதல் வேண்டும்.

2.1.3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ்வரும் ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர் கல்வி நிறுவனத்திலோ முழுநேர கற்கை நெறிக்கு பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்கள் இக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவர்.

2.2. **கல்வித் தகைமைகள் :**

2.2.1. விண்ணப்பதாரிகள் க. பொ. த. (உ./த.) பரீட்சை யில், கீழ்க் குறிப்பிட்டுள்ள பாடங்களில் மூன்றில் (03) சித்திபெற்றிருத்தல் வேண்டும் :

(i) பௌதிகவியல்
(ii) இரசாயனவியல்
(iii) இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம்

அத்துடன், இலங்கைப் பரீட்சைகள் ஆணையாளரினால் 2023 அல்லது 2024 அல்லது 2025 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ./த.) பரீட்சைகளில் ஒன்றில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2.2.1. "கடல்சார் கற்கைநெறிகள்" (வகை I) இற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா. /த.) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் திறமைச் சித்தி (C pass) பெற்றிருக்க வேண்டும்.

3. **தெரிவு முறைமை:**

3.1. **கற்கைநெறிக்கான அனுமதி :**

3.1.1. அனுமதிக்கான தெரிவானது க. பொ. த. (உ./த.) பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையிலும், தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தவிருக்கும் தகுதி காண் பரீட்சை முடிவுகளிலும் தங்கியிருக்கும்.

3.1.2. தகுதிகாண் பரீட்சையில் சித்தி எய்தியவர்களில், க. பொ. த. (உ./த.) பரீட்சையில் அதிகூடிய பெறுபேற்றையுடையவர்கள், திறமை வரிசை யில் தெரிவு செய்யப்படுவர் அதாவது வெட்டுப் புள்ளி முறை (Z-score) அடிப்படையாகக் கொள்ளப்படும். தெரிவு செய்யப்படு பவர்களில், 40% தினர் திறமை அடிப்படை யிலும், 60% தினர் மாவட்ட ஒதுக்கீடு முறை அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர்.

3.2 **கற்கைத்துறை:**

கற்கைத் துறைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்கையில் தகுதிகாண் பரீட்சைப் பெறுபேறு, விண்ணப்பதாரியின் கற்கைத்துறை தெரிவு வரிசை என்பன இணைந்து கருத்திற் கொள்ளப்படும்.

4. **விண்ணப்பிக்கும் முறை :**

4.1 **விண்ணப்பப்படிவம்** :

முதலில், விண்ணப்பதாரர்கள் கீழே தரப்பட்ட இணையத்தள முகவரியில் பதிவேற்றப்பட்டுள்ள ஒன்லைன் (Online) விண்ணப்பப்படிவத்தின் மூலமாக தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

http://www.itum.mrt.ac.lk

பின்னர், ஒன்லைன் (Online) மூலமாக சமர்ப் பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் சுயமாக பதிப்பிடக்கூடிய பிரதியை விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்யப்படல் வேண்டும் (download the auto generated printable copy of the online application)

4.1.1. பதிவிறக்கம் செய்யப்பட்ட ஒன்லைன் அச்சுப் பிரதி (hard copy), விண்ணப்பப்படிவ மானது பதிப்பிடப் பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டவாறு உள்ளடக்கப்பட்டவை உறுதிப் படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும் (விண்ணப்பப்படிவத்தின் 3 ஆம் மற்றும் 5 ஆம் கட்டங்களை பார்க்க).
முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் அச்சுப்பிரதியானது (hard copy), கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "NDT Admission 2026/2027" என ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டு, "Assistant Registrar, Academic & Student Affairs Division, Institute of Technology, University of Moratuwa, Diyagama, Homagama" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

4.1.2. ஒன்லைன் (Online) விண்ணப்பப்படிவமானது விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னராக சமர்ப் பிக்கப்படல் வேண்டும். அத்துடன், விண் ணப்பப்படிவத்தின் பதிப்பிடப்பட்ட நகலானது மேல் விண்ணப்ப முடிவு திகதி அன்று அல்லது அதற்கு முன்னராக முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

4.1.3. தமது விண்ணப்பப்படிவத்துடன் (hard copy), ஒரு சுய முகவரியிடப்பட்ட ரூபா 130.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (9"x4") கடித உறையையும் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு** :
ஒவ்வொரு விண்ணப்பதாரரும் ஒன்லைன் (Online) விண்ணப்பம் மற்றும் விண்ணப்பத்தின் பதிப்பிடப்பட்ட நகல் ஆகிய இரண்டையும் விண்ணப்ப முடிவு திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை கருத்திற் கொள்க. ஒன்லைன் (Online) விண்ணப்பம் மற்றும் விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி நகல் இரண்டையும் சமர்ப் பிக்கத் தவறிய விண்ணப்பதாரர்கள் அடுத்த கட்ட பரிசீலனைக்கு கருத்திற் கொள்ளப்பட மாட்டார்கள்.

4.2. **கற்கை நெறிக்கான முன்னுரிமை :**

4.2.1. இரண்டு வகையான கற்கைநெறிகள் உள்ளன.

4.2.2. விண்ணப்பதாரிகள் கடல்சார் கற்கைநெறிகள் (வகை 1) அல்லது ஏனைய கற்கைநெறிகள் (வகை 2) அல்லது இரண்டு கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.

4.2.3. இரண்டு கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பிக்கு மிடத்து உங்களது விருப்பு தெரிவு வரிசையை தெரியப்படுத்தல் வேண்டும்.

4.2.4. இரண்டு கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் முதலில் (வகை 1) பிரிவிற்காகப் பரிசீலிக்கப்படுவர். அப்பிரிவிற்குத் தகுதி பெறாத விண்ணப்பதாரர்கள் (வகை 2) பிரிவிற்காக பரிசீலிக்கப்படுவர்.

4.2.5. கற்கைநெறிகள் வகை (2) இற்கான முன்னுரிமை வரிசையை குறிப்பிடும் போது, முதலாவது விருப்பு 1, இரண்டாவது விருப்பு 2 என்றவாறு உங்களது விருப்ப தெரிவு வரிசையை 1, 2, 3, 4, 5, 6, 7, 8 என வரிசைப்படுத்துதல் வேண்டும்.

5.

5.1. **விண்ணப்பக் கட்டணம் :**

5.1.1. ஏதாவதொரு வகை கற்கைநெறிக்கு விண்ணப் பிக்க விரும்பினால் ரூபா 1,000.00 (ஆயிரம் ரூபா) உம் இரண்டு வகையான கற்கைநெறிகளுக்கும் சேர்த்து விண்ணப்பிக்க விரும்பினால் ரூபா 1,200.00 (ஆயிரத்து இருநூறு ரூபா) உம் விண்ணப்ப கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இதனை ஏதாவதொரு இலங்கை வங்கிக் கிளையில் மட்டும் தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை வங்கி, ஹோமாகம கிளையில் உள்ள கணக்கு இல. 83062337 க்கு வைப்பிலிட்டு பெறப்பட்ட பற்றுச்சீட்டை ஒவ்வொரு விண் ணப்பப்படிவத்துடனும் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பக் கட்ட ணம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

ஒன்லைன் விண்ணப்பத்துடன் ஒளிப்பிரதி (scan) செய்யப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மற்றும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பப்படிவத்தின் பதிப்பிடப் பட்ட நகலுடன் இணைத்து அனுப்பி வைக்கப் படல் வேண்டும்.

5.2. **விண்ணப்ப முடிவுத் திகதி :**

5.2.1. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 19.10.2026.

6. **தகுதிகாண் பரீட்சை மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சை :**

ஒவ்வொரு மாவட்டத்திலும், அம்மாவட்டத்திற்குரிய க. பொ. த. (உ./த.) பரீட்சைப் பெறுபேற்றுக்கமைய நிரல்படுத்தப்பட்டு அதிகூடிய பெறுபேற்றையுடைய விண்ணப்பதாரிகளே தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப்பரீட்சை தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும்.

7. **பதிவு செய்தல் :**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள், கற்கை நெறிக்குப் பதிவு செய்வதற்காக பின்வரும் சான்றிதழ் களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :

1. க. பொ. த. (உ./ த.) சான்றிதழ்
2. க. பொ. த. (உ. த.) வெட்டுப்புள்ளி மதிப்பீடு (Z- Score) சான்றிதழ்
3. பாடசாலை விலகற் சான்றிதழ்
4. பிறப்புச் சான்றிதழ்
5. சான்றிதழ்கள் அல்லது வேறு ஆவணங்களின் பெயர் மாற்றம் ஏதும் இருப்பின் அது தொடர்பான சத்தியக் கடதாசி.

8. **முக்கிய குறிப்புகள் :**

8.1. தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறிக்குப் பதிவு செய்த பரீட்சார்த்தி ஒருவர், அக்கற்கைநெறிக் காலப்பகுதியில், இந்நிறுவகத்திலோ அல்லது இலங்கையின் வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர்கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட வேறு எந்தவொரு உயர்கல்வி நிறுவனத்திலோ ஏதாவதொரு கற்கை நெறியை பயில்வதற்கு அனுமதி பெறுவதற்கும் தகுதியற்றவராவர்.

8.2. ஏற்கனவே இந் நிறுவகத்திலோ அல்லது வேறு ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர்கல்வி நிறுவனத்திலோ பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப் பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

8.3. விண்ணப்பப்படிவத்தில் உள்ள அனைத்து தகவல்களும் உண்மையானதாகவும் சரியான தாகவும் இருக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் உள்ள தகவல்கள் உண்மைக்கு முரணானது அல்லது தவறானது என அறியப்பட்டால் அவ் விண்ணப்பதாரி இக்கற்கை நெறிக்கான கற்றல் நடவடிக்கைகளில் இருந்து இடை நிறுத்தப்படுவார்.

பணிப்பாளர்,
தொழில்நுட்பவியல் நிறுவகம்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.

09-197

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் "இணைந்த அலுவலர்" சேவை வகுதியின் I ஆம், II ஆம் மற்றும் III ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2025-(II) 2026

சேவை பிரிவிற்குரிய பதவிப் பெயர்கள்

1. அபிவிருத்தி உதவியாளர்
2. திட்டமிடல் மற்றும் நிதி உதவியாளர்
3. முகாமைத்துவ உதவியாளர்

01. விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக் களத்தின் www.doents.lk என்ற இணையத்தளத்தில் "Our Services" இன் கீழ் உள்ள "Online Applications - Recruitment / E.B. Exams" ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை நிகழ் நிலை (Online) முறையின் மூலம் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். அதற்கமைய, நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணி 2026, செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதுடன் 2026, ஒற்றோபர் மாதம் 19 ஆம் திகதி பி.ப. 09.00 மணிக்கு நிறைவடையும். இப்பரீட்சை 2027, சனவரி மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

விண்ணப்பங்களை அனுப்பும் இறுதித் திகதி வரை தாமதிப்பதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான சூழ்நிலையையும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

02. I. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் என்பதுடன், பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்பட வேண்டும்.

II. பரீட்சார்த்தித் தகுதியைப் பெறுவதற்காக விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானி அறிவித்தலில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்பட நேரிடும்

III. இவ்வமைச்சின் கீழ் மேற்கூறப்பட்ட சேவைப் பிரிவுகளின் கீழ் நியமனம் பெற்ற உத்தியோகத் தர்கள், தமக்குரிய தரத்திற்கு ஏற்ப பின்வரும் அட்ட வணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மட்டுமே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்:

| *தொடர் இல.* | *பரீட்சையின் பெயர்* |
|---|---|
| 01. | இணைந்த அலுவலர் சேவையின் I ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2025-II (2026) (இணைந்த அலுவலர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்காக) |
| 02. | இணைந்த அலுவலர் சேவையின் II ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2025-II (2026) (இணைந்த அலுவலர் சேவையின் தரம் II உத்தியோகத்தர்களுக்காக) |
| 03. | இணைந்த அலுவலர் சேவையின் III ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2025-II (2026) (இணைந்த அலுவலர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களுக்காக) |

03. **விண்ணப்பங்கள்:**

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பதாரரால் நிகழ்நிலை மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட மென் பிரதியை செல்லுபடியாகும் விண்ணப்பமாகத் திணைக்களம் ஏற்றுக்கொண்டதா/ இல்லையாஎன்பது,முறைமையினுள்பிரவேசிப்பதற்காக பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரி மூலமாகவோ அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக் கப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது அவ் அறிவுறுத்தல்களை சரியாகப் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்படமாட்டாது. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப் படும்.

04. **பரீட்சைக் கட்டணம்:**

இவ்வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட் சைக்கு முதன்முறையாகத் தோற்றும் விண்ணப்ப தாரர்களிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப் படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையிலும் ஒரு பாடத்திற்கு ரூபா 250/- வீதம் பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை

முறைமையினூடாக வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் வழிமுறைகளின் கீழ் மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

i. ஏதேனும் ஒரு வங்கி கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

ii. இணையவழிப் பணப் பரிவர்த்தனை வசதியைக் கொண்ட ஏதேனும் ஒரு வங்கி பற்று அட்டை (Any Bank Debit Card With the Facility of Internet Transactions) மூலம்

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை / Flex செயலி (Online Banking Method / Flex App of Bank of Ceylon) மூலம்

iv. இலங்கை வங்கியின் ஏதேனும் ஒரு கிளையின் (Any Branch of the Bank of Ceylon) மூலம்

குறிப்பு :

(அ) மேலே குறிப்பிடப்பட்ட முறைகள் மூலம் கட்டணம் செலுத்தும் முறைமை தொடர்பான வழிகாட்டல்கள், இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப வழிகாட்டல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) பணக்கொடுப்பனவு கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் செய்தி மூலமாகவோ அறிவிக்கப் படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தைக் குறை வாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்ட கட்டணம் செலுத்தும் முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும்போது ஏற்படும் தவறுகளுக்கு இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்கமாட்டாது.

(இ) முந்தைய பரீட்சை ஒன்றுக்கு விண்ணப்பங்களை அனுப்பி, பரீட்சை அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் ஏதேனும் ஒரு காரணத்திற்காக பரீட்சைக்குத் தோற்றாவிட்டாலும், அவ்விண்ணப்ப தாரர்கள் இப்பரீட்சையின் போது பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். முதன்முறையாகப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதாகப் பொய்யான தகவலைக் குறிப்பிட்டுப் பரீட்சைக் கட்டணம் செலுத்தாமல் இப்பரீட்சைக்குத் தோற்றி, அது தெரியவரும் பட்சத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகளின் பாதகமான விளைவுகளை உரிய உத்தியோகத்தர் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

(ஈ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது அல்லது வேறு பரீட்சை ஒன்றுக்கு மாற்றப்படமாட்டாது.

05. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்குப் பின்வரும் ஆவணங்கள் மட்டுமே செல்லுபடியாகும்:

I. தேசிய அடையாள அட்டை;

II. செல்லுபடியாகும் வெளிநாட்டுப் பயணக் கடவுச் சீட்டு;

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

மேலும், பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் முகத்தை மூடாமலும், இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இரு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். இதற்கு உடன்படாத விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அத் துடன் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்த தருணத் திலிருந்து பரீட்சை நிறைவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருக்க வேண்டும்

06. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பித் துள்ளனர் என்ற முன் ஊகிப்பின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி யன்றோ அல்லது அதற்கு முன்னரோ சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களைக் கொண்ட விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் நிகழ்நிலை மூலமாக மட்டுமே வெளியிடப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களம் அது தொடர்பான இணையத்தள அறிவித்தலையும் விண்ணப்பதாரர்களுக்குக் குறுஞ் செய்தி மூலமாகவும் அறிவிக்கும். தனது பரீட்சை அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரர் எவரேனும் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைச் சரியாகக் குறிப்பிட்டு, கோரிக்கை கடிதமொன்றை இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனும் ஒரு

தகவலை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் அவசியமாயின் அதற்குரிய பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியையும் கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பரீட்சை அனுமதிப்பத்திரத்தைப் பரிசீலித்துப் பார்த்துத் திருத்தங்கள் ஏதேனுமிருப்பின், காலதாமதமின்றிப் பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பத்திற்கு அமைவாக உரிய திருத்தங்களைச் செய்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் வைத்துத் திருத்தங்களுக்காகக் கோரப்படும் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

07. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட பரீட்சை அனுமதிப் பத்திரங்களை வைத்துள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதியாகத் திணைக்களத் தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். பயணக் கட்டணங்கள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

08. பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மட்டுமே நடாத்தப்படும். அவற்றுள் தான் கல்வி கற்ற மொழி மூலத்திலோ அல்லது அரச கரும மொழியிலோ பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதுடன், தோற்றும் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

09. பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. பரீட்சை நடைமுறை: ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சைக்கும் தோற்றக்கூடிய உத்தியோகத்தர்களுக்கான பாடங்களும் பாடத்திட்டங்களும் பின்வருமாறு அமையும்.

10.1 இணைந்த அலுவலர் சேவையின் I ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2025-II (2026)

(தரம் III உத்தியோகத்தர்களுக்காக)

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *காலம்* | *சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளி* |
|---|---|---|---|---|
| 01. அலுவலக நடைமுறைகள் | 01 | 100 | 02 மணித்தியாலம் | 40 |
| 02. கணக்குகள் சார்ந்த செயற்பாடுகள் | 02 | 100 | 02 மணித்தியாலம் | 40 |

10.1.1 **அலுவலக நடைமுறைகள்** :

அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக நடைமுறைகள் பற்றிய அடிப்படை அறிவும், அவ்வறிவை நடைமுறையில் பயன்படுத்துவதற்கான ஆற்றலும், உத்தியோகபூர்வ ஆவணங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு தெளிவான மற்றும் சுருக்கமான குறிப்புகள் மூலம் தனது கருத்துக்களையும் அவதானிப்புகளையும் துல்லியமாகச் சமர்ப்பிக்கும் ஆற்றலும், கட்டளைகளுக்கமையக் கடிதமொன்றை வரைவாக்கம் செய்வதற்கான ஆற்றலும் பரீட்சிக்கப்படும்.

10.1.2 **கணக்குகள் சார்ந்த செயற்பாடுகள் :**

அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அடிப்படை கணக்குகள் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு ஏடுகளின் பணிகள் பற்றிய புரிதல்.

10.2 இணைந்த அலுவலர் சேவையின் II ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை -2025-II (2026)

(தரம் II உத்தியோகத்தர்களுக்காக)

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *காலம்* | *சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளி* |
|---|---|---|---|---|
| 03. தாபன நடைமுறை விதிகள் | 03 | 100 | 02 மணித்தியாலம் | 40 |
| 04. நிதிப் பிரமாணங்கள் மற்றும் அரசாங்க பெறுகைச் செயன்முறை | 04 | 100 | 02 மணித்தியாலம் | 40 |

10.2.1 தாபன நடைமுறை விதிகள் - தாபன விதிக் கோவையின் VI, VII, VIII, IX, X, XI, XVI, XXV, XXVI, XXVII, XXIX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள் மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள்

10.2.2 நிதிப் பிரமாணங்கள் மற்றும் அரசாங்க பெறுகைச் செயன்முறை – நிதிப் பிரமாணக் குறிப்பின் I, II, III, IV, V ஆகிய அத்தியாயங்கள் மற்றும் அரசாங்க பெறுகைச் செயன்முறை

10.3 இணைந்த அலுவலர் சேவையின் III ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2025-II (2026)

(தரம் I உத்தியோகத்தர்களுக்காக)

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *காலம்* | *சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளி* |
|---|---|---|---|---|
| 05. பொது அறிவு | 05 | 100 | 02 மணித்தியாலம் | 40 |
| 06. இலங்கையின் பொதுக் கல்வி தொடர்பான ஒழுங்கு விதிகள் மற்றும் நியமங்கள் | 06 | 100 | 02 மணித்தியாலம் | 40 |

10.3.1 **பொது அறிவு** :

கல்வி அபிவிருத்தி தொடர்பில் ஏற்பட்டுள்ள காலப்போக்கிலான மாற்றங்கள் பற்றிய புரிதல்.

10.3.2 **இலங்கையின் பொதுக் கல்வி தொடர்பான ஒழுங்கு விதிகள் மற்றும் நியமங்கள் :**

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள், கையேடுகள் மற்றும் ஏனைய வெளியீடுகள் பற்றிய புரிதல்.

11. விண்ணப்பதாரர் ஒருவருக்குப் பரீட்சை அனுமதிப்பத்திரம் வெளியிடப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாகக் கருதப்படக் கூடாது.

12. விண்ணப்பதாரர்களின் பெறுபேற்றுப் பட்டியல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் கல்வி அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

13. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத எவ்விடயம் தொடர்பிலும் இவ்வமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் முரண்பாடோ அல்லது பொருத்தமின்மையோ காணப்படும் பட்சத்தில், சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைவாகவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நாலக்க கළුவேவ,
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி
அமைச்சு.

கல்வி அமைச்சு
"இசுருபாய"
பத்தரமுல்ல,
2026.09.10.

09-222

## பொது அறிவித்தல்

### ஹோமியோபதி மருத்துவப் பயிற்சியாளர்களாகப் பதிவு செய்வதற்கான மூன்றாவது தேர்வு - 2026

2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் பிரிவு 30(3) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படுகின்ற அறிவித்தல்

ஹோமியோபதி சட்டத்தின் 30 (1) ஆம் பிரிவின் கீழ் ஹோமியோபதி மருத்துவப் பயிற்சியாளர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுள் தகைமைபெற்ற விண்ணப்பதாரர்களுக்காக, 2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் 30(2) ஆம் பிரிவின் கீழ் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள மூன்றாவது எழுத்துப் பரீட்சையானது, 2026 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 12, 13, 14 ஆம் திகதிகளில் மு. ப. 9.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரை நுகேகொடை, ஹைலெவல் வீதி, இலக்கம் 144 இல் அமைந்துள்ள ஸ்ரீ தம்மா ராமயவில் நடைபெறும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பதிவாளர் (பதில் கடமை),
ஹோமியோபதி மருத்துவச் சபை.

ஹோமியோபதி மருத்துவ சபை,
இல. 94, ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை,
வெலிசர,
றாகம.

09-224

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.